*மக்கமாதலத்தின் மாண்பினைக்குறித்து*
*மாமேதை ஸாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லாஹ் (ரழி) அவர்கள்*
இயற்றிய பாடல்

நல்ல முஹம்மது பிறந்த தலம் நாலுயார்களும் இருந்த தலம்
கல்லும் புத்துகள் க.ஃபாவிட்டு கண்டதேசங்கள் எறிந்த தலம்
வல்லோன் றஹ்மத்து இறங்குந்தலம் வருசை மூமீன்கள் வணங்குந்தலம்
எல்லா அறிவுமே உண்டாந்தலம் இனியதலமது மக்கந்தானே

சொர்க்க மாராயம் பெற்றோர் தலம்
துச்சன் அபுஜஹல் இறந்த தலம்
வெட்க மிகவுள்ளோர் உண்டாந்தலம்
வேசைகள் இல்லா ஆசைதலம்
ஹக்கன் திருவுளப்படி எல்லோரும்
காவீன் எழுதியே வாழுந்தலம்
வர்க்கம் பெரியதோர் குறைஷிக்குலம்
வாழுந் தலமது மக்கந்தானே

பொழுது நிலவுகள் விலகுந்தலம்
பூமிதனக் கெல்லாம் பொதுத்தலமாம்
களவு திருடுகள் தறிக்குந்தலம்
காணுஞ் சிறுபெண்கள் நாணுந்தலம்
எழுதுங் கணக்கெல்லாம் பார்க்குந்தலம்
இனிய ஞாயமாய் இருக்குந் தலம்
அழுது தொழுது தான் ஹஜ்ஜு செய்வோர்
அவர்கள் பிழையெல்லாம் பொறுக்குந்தலம்

பிறையைப் பிரித்திட்டுச் கூட்டுந்தலம்
புதுமை மிகுதியே காட்டுந்தலம்
மறையைக் கடந்தோரை ஓட்டுந்தலம்
வந்த முஸ்ஸீமைத் தீட்டுந்தலம்
சிறையின் அடிமையை உரிமையாக்கி
சீமான் றஹ்மத்தில் ஆக்குந்தலம்
அறையில் மங்கையர் வெட்குந்தலம்
அதிக தலமது மக்கந்தானே

நம்பி ராட்டியார் மகள் .ஃபாத்திமா
நாச்சி யாருக்கு கலியாணமாய்
தம்பி ரான்முன்னே நிக்காஹெழுதி
ஷ.ஃபா அத்துக்காகப் பெற்ற தலம்
அம்பு லிபோலே ஹஸன் ஹுஸைனும்
கன்பர் பின்முன்னே அலியுமாக
கண்ட தேசங்கள் கொண்டதலம்

தீனுக் குதவியாம் மதீனத்துக்கு
சேர்ந்த தலமான மக்கமென்றும்
மானுக் குதவியாம் நபியுடைய
மக்கந் தனக்கான மதீனமென்றும்
கோனுக் குகந்ததோர் நன்மார்க்கத்தை
குவலயந் தனில் வெளிச்சமாக
வானுக் குகந்ததோர் நபிதமக்கு
மறையு மிறங்கிய மக்கந்தானே

எங்கள் முஹம்மது இருந்த தலம்
எல்லா பறக்கத்தும் உண்டாந்தலம்
பொங்கும் க.்.பாக்கு மேல்வானத்தில்
பதியோன்வன் பைத்துல் ம.்.மூருதான்
சங்கை யுளபள்ளி தனக்கு மேலாம்
தலந் தக்கோனருஷ் குருஸூமாக
அங்கம் புதுமைகள் எல்லாத்தையும்
அல்லாஹ் அறிந்தோர் பெரிய தலம்
ஆதம் நபிமுதல் நபிமார்களும்
அவ்லி யாக்களும் நாடுந் தலம்
நீதமுள நபி தமக்குகந்த
நெறிசேர் அறிவாளர் கூடுந்தலம்
பூதலம் ஆண்ட சுல்த்தான்களும்
புகழ்ந்து ஆதியை வணங்குந்தலம்
பேத கமான பேர்கள் செய்த
பெருத்த பாவத்தை நீக்குந்தலம்

***ஹளரத் S.M.B. மஹ்மூது ஹுஸைன் மவ்லானா அவர்கள் அருளிய துஆ***

அல்லாஹ் அவன்திரு அருள்விழைந்து
அந்த எழில் மிகு தலமடைந்து
எல்லாப் புனிதநல் அமல் புரிந்து
ஏந்தல் நபிமுனம் இனிதுவந்து
சொல்லால் ஸலவாத்து சலாமுரைத்து
சுபமே ஹஜ்ஜெனுங் கடன்முடித்து
நல்லோராகிய உங்களுக்கு
நவில்வோம் ஸோபணம் உளங்கனிந்து
நீங்களடைந்த இம்மகத்துவத்தை
நிலமேல் நாங்களும் பெறுவதற்கு
பாங்கா ரிறைவனை வேண்டிடுவீர்
பவமும் பிழையறக் கேட்டிடுவீர்
உங்கள் திருஹஜ்ஜின் கிரியைகளை
உயர்வாய் நிறைவுடன் ஏற்றிடவும்
தங்கும் பவப்பிணி போக்கிடவும்
தனியோ னவனிடம் வேண்டுகிறோம்